**பக்கம்.**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.114/2021**

பி.**வா.சா.–1 – பாண்டியன் , த/பெ.நாகரத்தினம்**

**நாள். 17.03.2026**

பி.**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை :–**

வாதியும், பிரதிவாதியும் உள்ளூர்காரர்கள் என்பதால் எனக்கு தெரியும். வாதி மாரிமுத்து சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பு என் வீட்டிற்கு வந்து என்னை கையெழுத்து போடும்படி கேட்டார். எழுதப்படாத புரோநோட்டில் கையெழுத்து கேட்டார். நான் 4 கையெழுத்து போட்டேன். அதை நான் படித்துப் பார்க்கவில்லை. எதுவும் நிரப்பபடவில்லை. நான் கையெழுத்து போடும் போது என்னையும், மாரிமுத்துவையும் தவிர வேறு யாரும் இல்லை.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இன்று நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் சொல்ல வந்தேன். அழைப்பாணை வந்தது குறித்து பிரதிவாதியை விசாரிக்கவில்லை. தாவா வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. மணிவேல் உள்ளூரில் நிறைய கடன் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 4 புரோநோட்டுக்களில் நான் கையெழுத்திட்டேன். மற்ற சாட்சியாக யார் கையெழுத்திட்டார் என்பதை நான் பார்க்கவில்லை. அதை யார் எழுதியது என்று நான் பார்க்கவில்லை. எனக்கு எந்த விவரமும் தெரியாமல் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளதால் எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.17 21:40:28 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.